DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 69/2014 |
| Deposition of Witness for | PW 9 |
| Name | கவிதா |
| Father / Husband Name | கல்யாணகுமார் |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 02nd July 2026.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

1) நான் தற்சமயம் சேலம் துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்சமயம் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனத்தணிக்கை ஆய்வாளர் ஆக பணிபுரிந்த சமயம் கடந்த 01.10.2012ம் தேதி மாலை சுமார் 03.15 மணியளவில் நான் பணியிலிருந்த போது சிவகங்கை நகர் காவல் நிலைய குற்ற எண். 1040/2012 பிரிவு 304(ஏ) இதச என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 63 AB 1224 மாசானிஅம்மன் என்ற டிப்பர் லாரியை விபத்து காரணம் அறியும் பொருட்டு வாகன ஆய்வுக்கு வந்த வாகனத்தைஆய்வு செய்தேன்.

2) மேற்படி வாகனவிபத்துக்கான காரணம் மெக்கானிக்கல் குறைபாடு அல்ல. கால்தடை திறன் 68% என இருந்தது. hand brake நல்ல நிலையில் இருந்தது. வாகனத்தின் டயர் திருப்திகரமான நிலையில் இருந்தது. இவ்விபத்திற்கு இயந்திர கோளாறு ஏதும் காரணமில்லை என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய (**அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சம்பவ இடத்தில் சென்று நான் வாகனத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் நடந்து வருபவர் மீது லாரிமோதினால் வாகனத்தில் சிறு சேதமாராவது ஆக வாய்ப்பு உள்ளது என்றால் மோதும் வேகத்தை பொறுத்து உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் உங்களை விசாரித்தார்களா என்றால் ஆம், விசாரித்தார்கள், சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

BALSAMY VAISHNAVI
Digitally signed by BALSAMY VAISHNAVI
Date: 2026.07.02 17:52:40 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**